Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**




தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 073 | வெள்ளிக்கிழமை Friday | 12.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

### தமிழக முதலமைச்சர் விஜய் உள்பட அனைத்து மாநில முதல்வர்களும் பங்கேற்பு:

# நாட்டின் வளர்ச்சிக்கு ஒன்று சேர்ந்து உழைப்போம்

## நிதி ஆயோக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேச்சு



நிதி ஆயோக் கவுன்சிலின் 11-வது கூட்டம் டெல்லி ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் உள்ள கலாசார மையத்தில் (வியாழக்கிழமை) காலை தொடங்கி நடைபெற்றது. இந்த கூட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமை தாங்கினார். இந்த உயர்மட்டக் கூட்டத்தில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முதல்- மந்திரிகள், யூனியன் பிரதேசங்களின் துணைநிலை கவர்னர்கள் மற்றும் நிர்வாகிகள், பதவிவழி உறுப்பினர்களாகப் பணியாற்றும் மத்திய மந்திரிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்துகொண்டனர். நிதி ஆயோக்கின் துணைத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஆகியோரும் உடனிருந்தனர்.

மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா மற்றும் பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு தொடர்பாக தனது எக்ஸ் வலைதளத்தில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது:-

நிதி ஆயோக்கின் ஆளும் குழுவின் 11வது கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறேன். கூட்டுறவு கூட்டாட்சித் தத்துவத்தின் வழிகாட்டுதலுடன், இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தை விரைவுபடுத்த நாம் ஒன்றிணைந்து செயல்படுகிறோம். வளர்ச்சி அடைந்த இந்தியா என்கிற நமது பொதுவான தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சிகள் முக்கியப் பங்காற்றும்.


இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, இந்தக் கூட்டத்தில், அடிப்படை மனித மூலதனத்தையும் எதிர்காலத்திற்குத் தயாரான திறன்களையும் வளர்த்தல், பரவலாக்கப்பட்ட வளர்ச்சி மூலம் ஆக்கப்பூர்வமான வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவை ஊக்குவித்தல், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து விளைவுகளை மேம்படுத்துதல், மற்றும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சமத்துவத்தையும் கண்ணியத்தையும் உறுதி செய்தல் ஆகிய நான்கு முக்கியத் தூண்களை மையமாகக் கொண்ட "அனைவரையும் உள்ளடக்கிய மனித மேம்பாட்டுக் கட்டமைப்பு" குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொழில்முனைவை ஊக்குவிப்பது, திறன் மேம்பாட்டு முயற்சிகளை வலுப்படுத்துவது மற்றும் நாடு முழுவதும் நிலையான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவற்றுக்கான வழிகள் குறித்தும் இந்தக் குழு விவாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கூடுதலாக, டிசம்பர் 26 முதல் 28, 2025 வரை நடைபெற்ற ஐந்தாவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் இருந்து வெளிவந்த பரிந்துரைகளையும் உறுப்பினர்கள் ஆய்வு செய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## தமிழகத்தில் காலியாக உள்ள 5 தொகுதிகளுக்கு
## ஆகஸ்டு மாதம் இடைத்தேர்தல்: அடுத்த மாதம் இறுதியில் தேதி அறிவிப்பு



தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 17-வது சட்டசபை தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. முதல்-அமைச்சராக பொறுப்பேற்றுள்ள அக்கட்சியின் தலைவர் விஜய் பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு, இரண்டிலும் வெற்றி பெற்றார். அதன்பின்னர், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை அவர் ராஜினாமா செய்தார்.

இதேபோல், சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க த.வெ.க. அரசுக்கு 25 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் ஆதரவு அளித்தனர். இதில், மரகதம் குமரவேல் (மதுராந்தகம்-தனி), ஜெயக்குமார் (பெருந்துறை), சத்யபாமா (தாராபுரம்-தனி), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) ஆகியோர் தங்களது எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தனர். இந்த நிலையில், திருச்சி கிழக்கு, மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளை காலியானதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஒரு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டால், அந்த நாளில் இருந்து 6 மாதத்திற்குள் இடைத்தேர்தல் நடத்தியாக வேண்டும் என்று விதி உள்ளது. இந்த 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவதற்கான முன் தயாரிப்பு பணிகளை மேற்கொள்ள மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உத்தரவிட்டுள்ளார்.

**முன் தயாரிப்பு பணி**

முதல் கட்டமாக வாக்குப்பதிவு இயந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடக்கூடிய துணை ராணுவத்தினரின் பட்டியலை தேர்தல் ஆணையம் உள்துறை அமைச்சகத்திடம் கேட்டுள்ளது.

மேலும், 5 தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள, தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் அதிகாரிகள் ஆகியோரிடம் வாக்காளர்களின் எண்ணிக்கை, வாக்குச்சாவடிகள் உள்ளிட்ட தேர்தல் நடத்துவதற்கான முன் தயாரிப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த தகவல்களை வரும் 22-ம் தேதிக்குள் அறிக்கையை தயாரித்து அளிக்க வேண்டும் என்றும் 5 மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் காலியாக உள்ள 5 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் தேதி அடுத்த மாதம் (ஜூலை) இறுதியில் அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளது. ஆகஸ்டு மாதத்தில் தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிகிறது.

## ஓமன் அருகே அமெரிக்க தாக்குதலுக்கு உள்ளான கப்பலில் 3 இந்திய மாலுமிகள் உயிரிழப்பு

புதுடெல்லி: ஓமன் அருகே அமெரிக்க படையினரால் தாக்கப்பட்ட கப்பலில் இருந்த 3 இந்திய மாலுமிகள் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. எம்.டி. செட்டெபெல்லோ கப்பலில் பணிபுரிந்த 3 மாலுமிகள் காணமால் போனதாக கூறப்பட்ட நிலையில், அவர்கள் மூவரும் உயிரிழந்துவிட்டதாக இந்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானாந்த சோனாவால் உறுதிப்படுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஆரம்பத்தில் காணாமல் போனதாகக் கூறப்பட்ட இந்திய மாலுமிகள் மூவரும் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளன. இது நமது கடல்சார் சமூகத்துக்கு ஒரு பேரிழப்பு. கடினமான இந்த தருணத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருடன் மோடி அரசு உறுதியாக நிற்கிறது. அவர்களின் குடும்பத்தினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது. மீட்கப்பட்ட கப்பல் ஊழியர்களை உடனடியாக தாயகம் அழைத்து வர உத்தரவிட்டுள்ளேன். மேலும், உயிரிழந்தவர்களின் உடல்களை அவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க விரைவாகக் கொண்டு வருமாறும் உத்தரவிட்டுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியதை அடுத்து, ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவதாக ஈரான் அறிவித்தது. ஈரானின் இந்த நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்கா தனது கடற்படை மூலம் அப்பகுதியை முற்றுகையிட்டது. இதன்மூலம், ஈரான் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடப்பது தடுக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, சில நாடுகளின் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டன. இந்நிலையில், ஓமன் கடற்கரை அருகே சென்றுகொண்டிருந்த பலாவு நாட்டின் கொடி ஏற்றப்பட்ட கப்பல் மீது அமெரிக்க கடற்படை தாக்குதல் நடத்தியது. ஈரான் துறைமுகங்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள தடையை அந்தக் கப்பல் மீறியதாகவும், அமெரிக்க படைகளின் உத்தரவுகளை கப்பல் ஊழியர்கள் தொடர்ந்து புறக்கணித்ததாகவும், இதன் காரணமாக அந்தக் கப்பலின் இயந்திர அறையை அமெரிக்க விமானம் துல்லியமாக தாக்கியதாகவும் அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவு (புதன்கிழமை) தெரிவித்தது.

இந்தத் தாக்குதலுக்கு நேற்று கடும் கண்டனம் தெரிவித்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சகம், அமெரிக்காவின் தூதரகப் பொறுப்பாளரை நேரில் வரவழைத்து தனது எதிர்ப்பை பதிவு செய்தது.

இதன் தொடர்ச்சியாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "ஓமன் கடற்கரைக்கு அருகே செட்டெபெல்லோ என்ற வர்த்தக கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். கப்பலில் இருந்த 24 இந்திய பணியாளர்களில் 21 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மூவர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது" என தெரிவித்திருந்தது.

இந்நிலையில், அந்த மூவரும் உயிரிழந்ததை மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் உறுதிப்படுத்தி உள்ளார்.

**வரி விளம்பரங்கள்**



| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

## தங்கம் விலை தொடர் சரிவு

சென்னை: ஆபரணத் தங்கத்தின் விலை இன்று பவுனுக்கு ரூ.2,400 குறைந்து, ரூ.1 லட்சத்து 8 ஆயிரத்துக்கு விற்பனை ஆகிறது. கடந்த இரு தினங்களில் மட்டும் ரூ.5,000-க்கும் மேலாக குறைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

இந்நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.2,400 குறைந்து, ரூ.1 லட்சத்து 8 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது. ஒரு கிராம் தங்கம் ரூ.300 குறைந்து, ரூ.13,500-க்கு விற்பனை செய்யப்பட்டது. 24 காரட் தங்கம் ஒரு பவுனுக்கு ரூ.2,616 குறைந்து, ரூ.1 லட்சத்து 17 ஆயிரத்து 824 ஆக இருந்தது.



இதுபோல, வெள்ளி விலையில் மாற்றமின்றி கிராம் ரூ.260 ஆகவும், கட்டி வெள்ளி கிலோ ரூ.2 லட்சத்து 60 ஆயிரமாகவும் இருந்தது.

தங்கம் விலை குறித்து, சென்னை தங்கம் மற்றும் வைர நகை வியாபாரிகள் சங்கச் பொதுச்செயலாளர் சாந்தகுமார் கூறுகையில், "சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஏற்றத்தால், தங்கத்தின் விலை ஒரு டிராய் அவுன்ஸ் 4,300 டாலரில் இருந்து இப்போது, 4,100 டாலர் வரை இறங்கியுள்ளது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

முதலமைச்சர் விஜய் தலைமையிலான தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது

# த.வெ.க.வினரின் அட்ராசிட்டி மற்றும் மிரட்டல் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் திமுக முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் குற்றம் சாட்டியுள்ளார்



தூத்துக்குடியில் திமுக முன்னாள் அமைச்சரும், வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான கீதா ஜீவன் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுகையில், தமிழக வெற்றிக் கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்டுள்ள 'சிங்கப் பெண் அதிரடிப்படை திட்டம்' என்பது ஒரு ஆடியோ லான்ஞ்ச் நிகழ்ச்சி போலதான் இது புதிய திட்டம் அல்ல. அது ஏற்கனவே திமுக ஆட்சிக் காலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும். அதற்குத் தற்போதைய தவெக அரசு ஸ்டிக்கர் ஒட்டி, புதிய திட்டம் போல விளம்பரம் செய்து கொள்கிறது. பெண்கள் பாதுகாப்பு குறித்து மேடைகளில் பேசும் முதல்வர் விஜய், ஸ்ரீவைகுண்டம் பகுதியில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டுள்ள தனது நீண்ட கால ரசிகையும் சொந்தக் கட்சிக்காருக்கு தக்க பதில் சொல்வாரா? இந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் தொடர்புடைய தவெக சட்டமன்ற உறுப்பினர் கூட்டாளிகள் மீது முதல்வர் விஜய் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்? இனிமேலாவது உரிய நடவடிக்கை எடுப்பாரா? தவெக தலைவர்கள் பேசும் தனிமனித ஒழுக்கத்திற்கும், அவர்களின் கட்சியினர் களத்தில் செயல்படுவதற்கும் எவ்விதசம்பந்தமும் இல்லை.

தவெகவினர் மருத்துவமனை, பள்ளிக்கூடம், அரசு அலுவலகங்கள் என எங்கு சென்றாலும் அவர்களின் மிரட்டல்களும், அடாவடிச் சம்பவங்களும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. தாங்கள் சொல்வதைத் தான் கேட்க வேண்டும் என்று அரசு அலுவலர்களை நேரடியாக மிரட்டி வருகின்றனர். தமிழகத்தில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் டாஸ்மாக் மதுபானக் கடைகளை மிரட்டி, தவெகவினர் தொடர்ச்சியாகப் பணவசூலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் தற்பொழுது நிலவி வரும் கடுமையான மின்சாரத் தட்டுப்பாட்டிற்குத் தவெக அரசின் ஒட்டுமொத்த நிர்வாகச் சீர்கேடுகளே காரணம், தற்பொழுது ஊடகச் சுதந்திரத்தைப் பறிக்கும் வகையில் 3 முக்கியத் தொலைக்காட்சி சேனல்களை இந்த அரசு முடக்கி ஜனநாயகத்தின் குரல்வலையை நசுக்கி உள்ளது. ஆதவ் அர்ஜுனா தன் மீதுள்ள குற்றங்களை மறைப்பதற்காகவே தொடர்ந்து தேவையின்றிச் சவடால் பேசி வருகிறார். தற்போதைய சூழலில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் திமுக மிகவும் ஆக்கப்பூர்வமாகவும், பொறுப்புடனும் செயல்பட்டு வருகிறது என்று கீதா ஜீவன் தெரிவித்தார்.

பேட்டியின் போது, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன் பகுதி செயலாளர்கள் ரவீந்திரன், நிர்மல்ராஜ் மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் கவிதாதேவி, மாநகரமகளிர்அணிஅமைப்பாளர்ஜெயகனி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அபிராமிநாதன், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் அருண் குமார், பொறியாளர் அணி தலைவர் பழனி, கவுன்சிலர் விஜயகுமார், அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், ஐடி விங் துணை ஒருங்கிணைப்பாளர் பிரபு, தொகுதி ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை, இளைஞர் அணி துணை அமைப்பாளர்ரவி, சூர்யா பிரதிநிதி பாஸ்கர் உடனிருந்தனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள்சாமியின் தந்தை ஐ.என்.டி.யு.சி தேசிய செயல் தலைவர் கதிர்வேலை தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் வக்கீல் முனியசாமி, காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் த.வெ.க நிர்வாகிகள் தொண்டர்கள் உள்பட பலா் உடன் இருந்தனர்.

# அச்சிறுப்பாக்கம் அருகே அதிமுகவில் இருந்து விலகி தமிழக வெற்றிக் கழகத்தில் இனைந்தனர்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றியம் தமிழக வெற்றி கழகத்தின் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட செயலாளர் M.S.பாலாஜி அவர்கள் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட இணை செயலாளர் RSP.ஜான்ராஜேஷ் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட பொருளாளர் B.சபரி ராஜேஷ் இவர்களின் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக மாவட்ட இளைஞரணி துணை செயலாளர். பெரும்பேர் T.நாகராஜ் மற்றும் அச்சிறுப்பாக்கம் ஒன்றிய எம்ஜிஆர் மன்ற இளைஞர் அணி இணை செயலாளர் சதாசிவம் உள்ளிட்ட அதிமுகவினர் தங்களை தமிழக வெற்றி கழகத்தில் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய தலைவர் U.இளங்கோ வன் தங்களைஇனைத்துகொண்டனர் இதில் கழகநிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



சென்னை தலைமைச் செயலகத்தில் வைத்து தமிழ்நாடு அரசு கொறடா சபரிநாதனனை தமிழக காங்கிரஸ் விவசாய பிரிவு மாநில பொதுச் செயலாளர் ஆர். எஸ்.ராஜன் சந்தித்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் குறித்து கோரிக்கை மனு அளித்தார்.



கடையநல்லூரில் ரூ.15 லட்சம் மதிப்புள்ள தங்க நகையை தவறவிட்ட

# உரிமையாளரிடம் ஒப்படைத்த விவசாயிக்கு கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு. இராசேந்திரன் நேரில் பாராட்டு

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் இஸ்லாமிய குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் திருமணத்திற்காக குடும்பத்தினர் சேர்த்து வைத்திருந்த நகை கடையநல்லூர் நகர பிரதானச் சாலை வழியாகச் செல்லும் போது இரு சக்கர வாகனத்தில் தவறி விழுந்துள்ளது.


அந்த வழியாகச் சென்ற சுந்தரேசபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ரத்தினவேல் பாண்டியன் அதை எடுத்து பார்த்தபோது தங்க நகை என தெரிந்தது. 100 கிராம் எடை கொண்ட அதனுடைய இன்றைய மதிப்பு சுமார் ரூபாய் 15 லட்சம் ஆகும்.

அதனை நேரடியாக நகர் காவல் நிலையத்திற்கு சென்று நேரில் ஒப்படைத்தார். காவல்துறையினர் நகைக்குரிய அடையாளங்களுடன் வந்த அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்து, நேர்மையாக நடந்து கொண்ட விவசாயிரத்தினவேல்பாண்டியனை பாராட்டினர்.

நகையைப் பறி கொடுத்தவர்கள் குடும்பத்துடன் வந்து கண்ணீர் மல்க பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தனர்.

இது பற்றி தகவல் அறிந்த கடையநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன், விவசாயி இரத்தினவேல்பாண்டியன் நேரில் பாராட்டினார்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



ஈரோடு மாவட்டத்தில் 1435-ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம், ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் 17.06.2026 முதல் தொடங்கப்பட்டு 24.06.2026 வரை நடைபெறவுள்ளது. அதன்படி, தாளவாடி வட்டத்தில்17.06.2026அன்றுமாவட்டஆட்சித்தலைவர் அவர்களாலும், பவானி வட்டத்தில் 17.06.2026 முதல் 19.06.2026 வரை ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களாலும், 17.06.2026 முதல் 19.06.2026 வரை மொடக்குறிச்சி, கொடுமுடி, நம்பியூர், ஆகிய வட்டங்களிலும், 17.06.2026 முதல் 23.06.2026 வரை ஈரோடு மற்றும் அந்தியூர் ஆகிய வட்டங்களிலும், 17.06.2026 முதல் 24.06.2026 வரை பெருந்துரை, கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம் ஆகிய வட்டங்களிலும் துணை ஆட்சியர் நிலையில் (சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள் மற்றும் திங்கள்கிழமை நீங்கலாக) அந்தந்த வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் 1435-ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம்நடத்தப்படஉள்ளது.எனவே,பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அந்தந்த வருவாய் தீர்வாய அலுவலர்களிடம் சமர்ப்பித்து உரிய நிவாரணம் தேடிக்கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

# 2026ம் நிதியாண்டில் இந்தியாவின் ஏற்றுமதி ரூ.82 லட்சம் கோடியை எட்டி சாதனை



சண்டிகர்: ஏற்றுமதியாளர் கள், தொழில்துறை அமைப்பு கள் மற்றும் விவசாய உற் பத்தியாளர் அமைப்புகளின் மாநாடு சண்டிகரில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் நிதின் குமார் யாதவ் ஆற்றிய உரையில் கூறியதாவது:

2014-15 நிதியாண்டில் 468 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி, 2025-26 நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவாக 863 பில்லியன் டாலராக (ரூ.82 லட்சம் கோடி) உயர்ந்துள்ளது. ஏற்றுமதி ஆண்டுக்கு 5.7% கூட்டு வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில், சரக்கு ஏற்றுமதி 310 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 442 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. சேவை ஏற்றுமதி 158 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து ஆண்டுக்கு 9.3% கூட்டு வளர்ச்சி விகிதத்தில் 421 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

மேலும், பெட்ரோலியம் அல்லாத பொருட்களின் ஏற்றுமதி 387.9 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற புதிய சாதனையை எட்டியுள்ளது. இது இந்திய ஏற்றுமதியின் பன்முகத்தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

100 பில்லியன் டாலர் நேரடி அந்நிய முதலீட்டு வாக்குறுதியுடன் கூடிய இந்தியா- ஐரோப்பா இடையிலான தடையற்ற வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டு ஒப்பந்தம், இந்தியாவின் 98% ஏற்றுமதிக்கு வரி இல்லா அனுமதியை வழங்குகிறது.



தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பாசறையில் பயின்று, தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநில ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள சங்கு நகர் ஜி. சதாம் உசேன், அக்னி தர்ஷன் ஆகியோர் 10.06.2026 அன்று ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா அவர்களை சந்தித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்களை பெற்றனர். இந்த நிகழ்வில் முன்னாள் மாவட்ட தலைவர் டி. திருச்செல்வம், துணைத் தலைவர் கே.எஸ். செல்வம், தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (TNTUC) மாநில துணைத் தலைவர் குளம் எம். ராஜேந்திரன், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் நெசவாளர் அணி தலைவர் சி. மாரிமுத்து, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப் பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மைத் துறை துணைத் தலைவர் கே.என். பாஷா, 46வது வார்டு தலைவர் பெரியார் நகர் சூரஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் பிரசன்னா, சங்கு நகர் இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் பாரூக், ஜெகன், ஷான் நவாஸ் ஆகியோர் கலந்து கொண்டு அனைவரிடம் வாழ்த்துக்களைப் பெற்றனர்.

# தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் ஈரோடு மண்டல மற்றும் அதன் பகுதிகளுக்கு உட்பட்ட பிற அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அலுவலர் / பணியாளர்களின் கவனத்திற்கு...




தமிழ்நாடு மின்சார வாரிய உத்திரவின்படி, தலைமைப் பொறியாளர் / பகிர்மானம்/ஈரோடு மண்டலம் / ஈரோடு அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ், ஈரோடு மண்டலம் மற்றும் அதன் பகுதியில் உள்ள பிற மின் வாரிய அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மின் வாரிய அலுவலர் / பணியாளர்களின் குறைகளை நேரில் கேட்கவும், மனுக்களை பெறவும் உடனடியாக தீர்த்து வைக்கவும், உரிய ஆலோசனை வழங்கவும் மூன்று பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவினர் ஒவ்வொரு காலண்டிற்குஒருமுறைஈரோடுமண்டலஅலுவலகத்தில் கூடி மின் வாரியத்திலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர் / பணியாளர்களின் குறைகளை நேரில் கேட்கவும், மனுக்களை பெறவும், உரிய நிவராணம் வழங்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.அதன்படி 2026-ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டிற்கான மின் வாரிய ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 17.06.2026 புதன்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு எண்.948, ஈ.வி.என்.சாலை, ஈரோட்டில் அமைந்துள்ள மின் வாரிய ஆய்வு மாளிகையில் நடைபெற உள்ளது. அதுசமயம் மின் வாரியத்திலிருந்து ஓய்வு பெற்ற அலுவலர் / பணியாளர்கள் மேற்கண்ட வாய்ப்பினை பயன்படுத்தி தங்களின் குறைகளை தீர்த்துக் கொள்ளமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தனிநபர் மனுக்கள் மற்றும் ஓய்வுபெற்றோர் சங்கங்களின் கோரிக்கைகள் முற்பகலிலேயே பெற்றுக்கொள்ளப்படும்.



நேற்று காலை 10 மணிக்கு தமிழ்நாடு இந்து அறங்காவலர் துறை திரு ரமேஷ் ஸ்ரீயோக சித்தரிடம் ஆசி பெற்றார்.

# நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையத்தில் சமீபகாலமாக தெருநாய்களின் நடமாட்டம் கணிசமாக அதிகரித்துள்ளது



நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையத்தில் சமீபகாலமாக தெருநாய்களின் நடமாட்டம் கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால், ரயிலுக்காகக் காத்திருக்கும் பயணிகள் மற்றும் பொதுமக்கள் கடும் அச்சத்திற்கும் அவதிக்கும் உள்ளாகி வருகின்றனர். நடைமேடைகள், டிக்கெட் கவுண்டர் பகுதி மற்றும் ரயில் நிலைய நுழைவாயில் என அனைத்து இடங்களிலும் கூட்டமாக நாய்கள் சுற்றித் திரிகின்றன. சில நேரங்களில் இவை பயணிகளை நோக்கி குரைப்பதாலும், துரத்துவதாலும் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பெண் பயணிகள் பெரும் பீதிக்குள்ளாகின்றனர்- பயணிகள் வைத்திருக்கும் உணவுப் பொருட்களைப் பறிக்க முயல்வதும், நடைமேடைகளில் அமர்ந்திருக்கும் பயணிகளின் உடமைகளை அசுத்தம் செய்வதும் தொடர்கதையாகி வருகிறது. குறிப்பாக இரவு மற்றும் அதிகாலை வேளைகளில், ரயில்களில் இருந்து இறங்கிவரும் பயணிகள் இந்த நாய்களிடம் இருந்து தங்களை தற்காத்துக் கொள்ள மிகவும் சிரமப்படுகின்றனர். ரயில் நிலையம் என்பது எப்போதும் பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த ஒரு முக்கிய பொது இடமாகும். இங்கு பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது ரயில்வே நிர்வாகத்தின் முக்கிய கடமையாகும்.

எனவே, இந்த விவகாரத்தில் தெற்கு ரயில்வே நிர்வாகமும், நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகமும் இணைந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. ரயில் நிலைய வளாகத்திற்குள் நாய்கள் நுழைவதைத் தடுக்கவும், உள்ளே இருக்கும் நாய்களைப் பிடித்து பாதுகாப்பான மாற்றவும், அவற்றுக்குக் கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்ளவும் அவசரநடவடிக்கைதேவைப்படுகிறது.எனசமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கை:|

# வேப்பூர் கடைவீதியில் காவல்துறையினர் தீவிர ரோந்து



கடலூர் மாவட்டத்தில் சட்டம்-ஒழுங்கை பாதுகாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் திட்டக்குடி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையில், வேப்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் காவல்துறையினர் வேப்பூர் கடைவீதி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடம் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு அறிவுரைகள் வழங்கப்பட்டதுடன், சந்தேகத்திற்கிடமான நபர்கள் மற்றும் வாகனங்கள் குறித்து கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. காவல்துறையினரின் இந்த ரோந்து நடவடிக்கை பொதுமக்களிடையே பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

# சரக்கு லாரி வாடகை 25 சதவீதம் உயர்கிறது



நாமக்கல்: டீசல் விலை உயர்வு காரணமாக லாரி வாடகைக் கட்டணம் 25 சதவீதம் உயர்த்த மாநில லாரி உரிமையாளர் சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

நாமக்கல்லில் இந்த சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டம் நடந்தது. இதில், 'மே 15 முதல் டீசல் விலை உயர்ந்துள்ளது. இதனால், லாரி உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதை தவிர்க்க லாரி வாடகை கட்டணம் தற்போதைய கட்டணத்தில் இருந்து 25 சதவீதம் உயர்த்தப்படுகிறது.

ஜிபிஎஸ் கருவி பொருத்த வேண்டும் என்ற முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும். அதிக பாரம் ஏற்றும் லாரிகளை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# குற்றாலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநிலக்குழு கூட்டம்

## அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் எம்.ஏ.பேபி, மாநில செயலாளர் பெ.சண்முகம் பங்கேற்பு



தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்குழு கூட்டம் ஜூன் 9, 10 தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

இந்தக் கூட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு உறுப்பினர் க.கனகராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி, அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் பி.வி.ராகவலு, கே.பாலகிருஷ்ணன், உ.வாசுகி, மாநிலச்செயலாளர் பெ.சண்முகம், மத்தியக்குழு உறுப்பினர்கள் பி.சம்பத், என்.குணசேகரன், கே.பாலபாரதி மற்றும் மாநில செயற்குழு, மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

விலைவாசி உயர்வு - நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்பு - நூறுநாள் வேலைத் திட்டத்தில் திருத்தம் ஆகியவற்றை கைவிட வலியுறுத்தி சிபிஐ(எம்) ஜூன் 19 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெறும்

ஐந்து மாநில சட்டமன்ற தேர்தல் முடியும்வரை காத்திருந்த ஒன்றிய பாஜக அரசு, தேர்தல் முடிவுகள் வெளிவந்தபின் ஐந்து முறை பெட்ரோல்-டீசல் விலையை உயர்த்தியுள்ளது. சமையல் எரிவாயு மற்றும் வணிக சிலிண்டர்களின் விலையையும் இரண்டு முறை உயர்த்தி உள்ளது. இந்த விலை உயர்வு காரணமாக இதர அத்தியாவசிய பொருட்கள் மீதான விலையை உயர்த்திட வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர்வெறி காரணமாக, ஈரான் எண்ணெய் உற்பத்தி, ஹோர்மூஸ் நீரிணை மூலமாக உலக நாடுகளுக்கு விநியோகம் செய்யப்படும் பெட்ரோலியப் பொருட்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. அமெரிக்காவின் இந்த போர்வெறியை கண்டிக்காத மோடி தலைமையிலான அரசு, இந்திய மக்கள் மீதான சுமையை ஏற்றி வருகிறது. இது வன்மையான கண்டனத்திற்கு உரியது. இதுகுறித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் இடதுசாரி கட்சிகள் சார்பில் தமிழ்நாட்டில் இரண்டு முறை கண்டன இயக்கம் நடத்தி உள்ளோம்.

மேற்படி பெட்ரோலிய தட்டுப்பாடு உலக அளவில் உரத்தட்டுப்பாட்டை நோக்கி தள்ளி விடும் அபாயம் உள்ளது. அது ஒட்டுமொத்த உணவு உற்பத்தி விநியோகம் ஆகிய உணவு சங்கிலியை கடுமையாக பாதிக்கும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சுட்டிக்காட்டுகிறது. இதற்கு எதிரான போராட்டத்தையும் நடத்த வேண்டியுள்ளது.

மேலும், தொழிலாளர்களுக்கு எதிரான நான்கு சட்டத் தொகுப்புகள் அமலாக்கத்தை பாஜக அரசு கைவிட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வலியுறுத்தி வருகிறது. கார்ப்பரேட் நிறுவனங்களின் கொள்ளைலாபம், கதவடைப்புக்கான வாய்ப்பு போன்றவற்றை உறுதி செய்யும் வகையில் இந்த சட்ட தொகுப்புகள் அமலாக்கப்பட்டுள்ளது. மறுபுறம், தொழிலாளர்கள் அனுபவித்து வரும் வேலை நிறுத்த உரிமை உள்ளிட்ட பல்வேறு உரிமைகளை பறித்து அடிமைகளாக மாற்றும் சூழலை உருவாக்கும். அதுமட்டுமல்ல, ஒப்பந்தம் உள்ளிட்ட நிரந்தரமற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் வகையிலும், கார்ப்பரேட் நிறுவனங்களின் எல்லையற்ற சுரண்டலை அதிகப்படுத்தும் வகையிலும், இந்த சட்டத் தொகுப்புகள் அமைந்துள்ளது. அண்மையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் டெல்லி மற்றும் அதை சுற்றி உள்ள தேசிய தலைநகர் மண்டலத்தின் 82 இடங்களில் நடந்த போராட்டங்கள் குறிப்பிடத்தக்கது. எல்லையற்ற சுரண்டலை தொழிலாளர்கள் வலுவான எதிர்ப்பு போராட்டங்களுக்கு செல்வார்கள் என்பதை உணர்த்துகிறது.

மூன்றாவதாக, தேசிய கிராமப்புற வேலை உறுதிச் சட்டம் 'விபி ஜி ராம் ஜி' என திருத்தப்பட்டு கடந்த காலத்தில் அனுபவித்த உரிமைகளை இழக்கும் அபாயம் உள்ளது. ஏற்கனவே 90 சதவிகிதம் நிதியை ஒன்றிய அரசு பங்கிட்டு கொள்ளும் என்பதை 60:40 என ஒன்றிய அரசின் பங்கை குறைத்து, மாநில அரசின் பங்கை உயர்த்தி இருப்பது, வேலை உறுதிச் சட்டத்தின் நோக்கத்தை நீர்த்துப் போக செய்துள்ளது. 100 நாள் வேலையை 125 நாட்களாக உயர்த்தப் போவதாக பொய்யான வாக்குறுதி வழங்கி உள்ளது. தற்போது சராசரி வேலை நாட்களாக 35/22 தான் உள்ளது. இதற்கு காரணம் ஒன்றிய பாஜக அரசு நிதியை வெட்டி சுருக்கியது ஆகும். எனவே தான், பாஜக 125 நாட்கள் வேலை என பொய்யான பிரச்சாரம் செய்வதை கைவிட வேண்டும், வேலை நாள் 200 மற்றும் கூலியை ரூ. 700 என்கிற அளவிற்கு உயர்த்தி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பலன் முழுமையாக கிராமப்புற உழைப்பாளிகளுக்கு கிடைக்கும் வகையில் நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வலியுறுத்துகிறது.

மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி, ஜூன் 19 அன்று தமிழ்நாடு முழுவதும் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்குழு தீர்மானித்து உள்ளது.

## கோவை சூலூர் சிறுமி பாலியல் கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவருக்கு

# போக்சோ மற்றும் பாலியல் குற்றங்களுக்கான கோவை முதன்மை சிறப்பு நீதிமன்றத்தில் குற்றவாளிகள் இருவருக்கும் குற்றப்பத்திரிக்கை நகல் வழங்கப்பட்டது



கடந்த மாதம் 21 ஆம் தேதி கோவை சூலூர் அடுத்த பள்ளபாளையம் பகுதியைச் சேர்ந்த 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக சம்பவம் நடந்த மறுநாள் 22 ஆம் தேதி சிறுமியின் வீட்டின் அருகே வசித்து வந்த கார்த்திக் மற்றும் அவருடன் இருந்த மோகன்ராஜ் என இருவர் கைது செய்யப்பட்டனர். இருவர் மீதும் போக்சோ மற்றும் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட நிலையில் இருவரும் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கு தொடர்பாக பல்வேறு கோணங்களில் விசாரணை செய்த காவல்துறையினர் இருவரையும் கடந்த வாரம் மூன்று நாட்கள் காவல் கட்டுப்பாட்டில் எடுத்து விசாரணை மேற்கொண்டனர். சம்பவம் நடைபெற்ற இடம், சிறுமியின் சொந்த ஊர், அவரது உறவினர்கள், பிரேத பரிசோதனை அறிக்கை, தடையவியல் ஆய்வறிக்கை, தொலை தொடர்பு சாதன உபயோகம் என பல்வேறு ஆவணங்கள் அடிப்படையில் 819 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிக்கையை கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள போக்சோ மற்றும் பாலியல் குற்றங்களுக்கான முதன்மை சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி பகவதி அம்மாள் முன்னிலையில் நேற்று தாக்கல் செய்தனர். இந்த நிலையில் கைது செய்யப்பட்டு மத்திய சிறையில் உள்ள குற்றவாளிகளான கார்த்திக் மற்றும் மோகன் ராஜிடம் குற்றப்பத்திரிகை நகல் வழங்குவதற்காக இருவரும் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து குற்ற பத்திரிக்கை நகல்களை இருவரிடமும் வழங்கிய நீதிபதி ஏற்கனவே இருவருக்கும் நாளைவரை நீதிமன்ற காவல் உள்ளதால் நாளை பிற்பகல் மீண்டும் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறும் அப்போது இது குறித்த விசாரணை தொடங்கும் என்றும் தெரிவித்தார். இதை அடுத்து ஆஜர் படுத்தப்பட்ட இருவரும் பலத்த பாதுகாப்புடன் மீண்டும் கோவை மத்திய சிறைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



# சிவகங்கையில் மதுபானக்கடையை அகற்றக்கோரி அனைத்துக் கட்சியினர் மறியல் போராட்டம்

சிவகங்கை நகர் ரயில் நிலையம் அருகில் மதுபானக் கடையும் மதுக் கூடமும் செயல்பட்டு வந்தது. இந்தக் கடை அந்தப் பகுதி பெண்களுக்கும் பள்ளிசெல்லும் மாணவர்களுக்கும் பல்வேறு வகையில் இடையூராய் இருந்தது. இந்தக் கடையை அகற்றக்கோரி அந்தப் பகுதி பொதுமக்கள் பலமுறை மனு செய்ததும் அரசு அந்தக் கடையை அகற்றாமல் இருந்தது. இந்தத் தகவலை அறிந்த சிவகங்கை எம்.எல்.ஏ குழந்தைராணி நாச்சியார் தலையிட்டு கடையை அகற்ற தீவிர முயற்சி செய்த நிலையில் இம்மாதம் 7 - ம் தேதி அந்தக் கடையில் ஒரு கொலைச் சம்பவம் நடந்து விட்டது. இதன் பிறகும் அதிகாரிகள் அந்தக் கடையை திறக்கப் போவதாக தகவல் வந்ததும் அனைத்துக் கட்சியினர் அங்கு விரைந்து சென்று கடையின் முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்தினார்கள். பின்பு அவர்கள் அங்கிருந்து களைந்து சென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரிலும் முற்றுகைப் போராட்டம் நடத்த முற்பட்டனர். அப்போது அங்கு வந்த தாசில்தார் மதுக் கடையையும் மதுக் கூடத்தையும் வேறு இடத்திற்கு மாற்றி விடுவதாக உறுதி அளித்ததால் அனைவரும் அங்கிருந்து களைந்து சென்றனர். இந்தப் போராட்டத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் ஒருங்கிணைத்து நடத்தினார்கள். அப்போது சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் சே.திருமாஆனந்த் போராட்டத்தை ஒருங்கிணைத்து தலைமை தாங்கி நடத்தினனார். போராட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வெற்றிவிஜயன் சிறப்புரையாற்றினார். அப்போது ஒன்றிய துணைச் செயலாளர் அழகேசன் இளஞ்சிறுத்தை எழுச்சிப் பாசறையின் மாவட்ட செயலாளர் தீபக் மண்டலதுணைச் செயலாளர் முத்துராஜா எம்ஜிஆர் நகர் ஆட்டோமாயா, பாலகிருஷ்ணன் கருங்காலக்குடி திருமா ரஞ்சித் கீழப்பூங்குடி வளவன்சின்னா மற்றும் மகளிர் அணியினர் சுற்றுவட்டார கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## குடியரசு தினவிழா 2027 ஆம் ஆண்டு

# பத்ம விருதுகள் மத்திய அரசால் வழங்கப்பட உள்ளது

## ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம்; கலெக்டர் ச.கந்தசாமி தகவல்




கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு (ம) மருத்துவத்துறை. சாதனை சமூக சேவை, அறிவியல் (ம) பொது விவகாரம், சிவில் சேவைகள், வர்த்தகம் மற்றும் தொழில் போன்ற துறைகளில் அளப்பறிய புரிந்தவர்களுக்கு குடியரசு தினவிழா 2027 ஆம் ஆண்டு "பத்ம விருதுகள்" மத்திய அரசால் வழங்கப்பட உள்ளது. ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த தகுதி வாய்ந்த பன்முக திறமை புரிந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 19.06.2026 க்குள் http://awards.gov.in என்ற இணையதளம் மூலம் வரவேற்கப்படுகிறது. இவ்விருது தொடர்பான விவரங்கள் அனைத்தும் http://awards.gov.in என்ற இணையதள முகவரியில் உள்ளது. மேலும் தகுதியான கருத்துருவை 19.06.2026 க்குள் ஈரோடு மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்விருது தொடர்பாக தேவைப்படும் விவரங்கள் மாவட்ட ஆட்சியரக வளாகம் 6 வது தளத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட சமூகநல அலுவலத்தை அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.45 வரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். இவ்வலுவலக தொலைபேசி எண். 0424-2261405 ஆகும். என மாவட்ட ஆட்சித்தலைவர் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கார்ஸ் 327 நிறுவனத்தின் சார்பில் ஜீன் ஜாக்பாட் யூஸ்டு கார் மேளா துவங்கியது



கார்ஸ் 327 நிறுவனத்தின் சார்பில் "ஜீன் ஜாக்பாட்" "யூஸ்டு கார் மேளா" துவங்கி நான்கு நாட்கள் கோவை சிங்காநல்லூர் வெங்கட் லட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து "கார்ஸ் 327" உரிமையாளர் விஷ்ணு வேணுகோபால் பத்திரிகையாளர்களிடம் கூறும் போது, இந்த கண்காட்சியில் 200க்கும் மேற்பட்ட தரமான யூஸ்டு கார்கள் இருப்பதாகவும், யூஸ்டுகார்கள்தேவைப்படுபவர்களுக்கு உடனடியாக பைனான்ஸ் ஏற்பாடுசெய்துதருவதாகும், வங்கி கடன் உதவி மற்றும் தனியார் கடனுதவி உடனுக்குடன் செய்து கொடுப்பதாகவும், வாகனங்களுக்கு இன்சூரன்ஸ்,சர்வீஸ் உள்ளிட்ட அனைத்தும் உடனடியாக செய்து கொடுப்பதாகவும்,ரூபாய் ஒரு லட்சம் முதல் 50 லட்சம் ரூபாய் வரை கார்கள் இந்த கண்காட்சியில் இடம் பெற்று இருப்பதாகவும் தெரிவித்தார்.

## திமுக கூட்டணியில் இருந்து இந்திய கம்யூனிஸ்டு கட்சி விலகல்; மு.வீரபாண்டியன் அறிவிப்பு



தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் 75 ஆண்டு கால திராவிட கட்சிகளான திமுக, அதிமுகவை பின்னுக்கு தள்ளி அரசியல் களத்தின் புதிய வரவான தமிழக வெற்றிக்கழகம் 108 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. இருப்பினும் பெரும்பான்மைக்கு தேவையான 118 இடங்கள் இல்லாததால் ஆட்சிமையக்க முடியாமல் இருந்தது.

இதனை தொடர்ந்து திமுக கூட்டணியில் இருந்து வந்த காங்கிரஸ் கட்சி அக்கூட்டணியில் இருந்து விலகி முதல் ஆளாக தவெகவுக்கு ஆதரவு அளித்தது. பின்னர் விசிக, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சிகள் தங்களது ஆதரவை தவெகவுக்கு அளித்தன. இதனால் பெரும்பான்மைக்கு தேவையான 118 இடங்களை தவெக தாண்டியதைடுத்து தமிழ்நாட்டின் முதல்-அமைச்சராக விஜய் பொறுப்பேற்றுக்கொண்டார்.

திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ் மட்டும் விலகிய நிலையில், மற்ற கட்சிகளான விசிக, இந்திய இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகள் திமுக கூட்டணியிலேயே தொடர்வதாகவும் தவெகவுக்கு வெளியில் இருந்துதான் ஆதரவு எனவும் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில், இன்று உள்ள சூழ்நிலையில் திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி இடம்பெற இயலாது என்று மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் அறிவித்துள்ளார். இப்போது இருக்கும் சூழலில் திமுக கூட்டணியில் இடம் பெற இயலாது. இதைவிட அழுத்தமாக சொல்ல முடியாது. கடந்த இரண்டு நாட்களாக நடத்திய ஆலோசனையை தொடர்ந்து தி.மு.க.கூட்டணியில் இருந்து விலக முடிவு செய்யப்பட்டது. கூட்டணி ஆட்சியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி தற்போது இல்லை; தவெகவுக்கு வெளியில் இருந்து ஆதரவுதான்.

இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் இந்திய கம்யூனிஸ்ட் மாநிலக் குழு கூடும். அதில் எந்த ஜனநாயக அணியுடன் சேர வேண்டும் என்பது அப்போதைய சூழல் பொறுத்து முடிவு செய்யப்படும். வர்க்க நலன் சார்ந்து போட்டியிட முடியும்.

இரு மொழிக் கொள்கையில் முதல்- அமைச்சர் விஜய் உறுதியாக இருக்க வேண்டும்; மெட்ரோ திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். விவசாய சங்கங்களின் கோரிக்கையை ஏற்று கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## விடைபெற்றார் பாரதிராஜா... சொந்த ஊரில் அரசு மரியாதையுடன் உடல் அடக்கம்



இயக்குநர் பாரதிராஜா (84 வயது) உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் காலமானார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் அவரது மகன் மனோஜ்மறைந்தநிலையில், அத்துயரிலிருந்து மீளாத பாரதிராஜா, உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.வீட்டில் இருந்தபடியே டாக்டர்கள் கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சைப் பலனின்றி சென்னை நீலாங்கரையில் உள்ள இல்லத்தில் இயக்குநர் பாரதிராஜா காலமானார். பாரதிராஜா மறைவுக்கு திரைத்துறையினர் இரங்கல் தெரிவித்தனர்.

சொந்த ஊரில் இறுதிச்சடங்கு

பாரதிராஜாவின் உடல் சென்னை நீலாங்கரையில் உள்ள இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பொதுமக்கள் பாரதிராஜாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். இதையடுத்து, இறுதிச்சடங்குக்காக பாரதிராஜாவின் உடல் அவரது சொந்த ஊரான தேனி மாவட்டம் வத்தலக்குண்டு அருகே கொடைக்கானல் பிரிவுக்கு பக்கத்தில் உள்ள காட்ரோட்டில் உள்ள பண்ணை வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது.

அங்கு பொதுமக்களின் அஞ்சலிக்காக பாரதிராஜாவின் உடல்வைக்கப்பட்டது. பாரதிராஜாவின் உடலுக்கு இன்றும் சினிமா பிரபலங்கள், அரசியல் தலைவர்கள், ரசிகர்கள், பொதுமக்கள் என திரளானோர் அஞ்சலி செலுத்தினர். அரசு சார்பில் அமைச்சர்கள் நிர்மல் குமார், வன்னி அரசு ஆகியோர் மலர் வளையம் வைத்து அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அரசு மரியாதையுடன் உடல் அடக்கம்

இதனை தொடர்ந்து, சொந்த ஊரான காட்ரோட்டில் உள்ள பண்ணைவீட்டில்மாலை 4 மணியளவில் பாரதிராஜாவில் உடலுக்கு இறுதிச்சடங்கு செய்யும் ஏற்பாடு தொடங்கப்பட்டது. காவல் துறையினர் பேண்ட் வாத்திய இசைக்கப்பட்டு, அணிவகுப்புடன் அவரது உடல், அடக்கம் செய்யும் இடத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது. அப்போது 72 குண்டுகள் முழங்க அவரது உடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டது. அதன் பின்னர் பண்ணை வீட்டில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## பனை விவசாயியை காவலர் சுட்ட வழக்கு: சிபிசிஐடி விசாரணைக்கு ஐகோர்ட் உத்தரவு



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அடுத்த மருதம் பூத்தூரைச் சேர்ந்த பெருமாள் சேட், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "எனது மகன் மணிகண்டன், பதநீர் இறக்கும் தொழில் செய்து வருகிறார். கடந்த ஏப்.7-ல் ஆலங்குளம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் இசக்கிராஜா மற்றும் சில போலீஸார் சீருடை அணியாமல் எங்கள் வீட்டிற்கு வந்து மணிகண்டனை உடன் அழைத்துச் சென்று, பனை மரத்தில் கட்டப்பட்டுள்ள பானைகளில் கள் உள்ளதா அல்லது பதநீர் உள்ளதா எனப் பார்க்க கூறியுள்ளனர்.

மணிகண்டன் மரம் ஏறும் போது சார்பு ஆய்வாளர் இசக்கிராஜா சாதிப்பெயரைச்சொல்லி திட்டினார். இதனை அங்க நின்றிருந்த நான் மற்றும் எனது பேத்தி ஆகியோர் தட்டிக்கேட்டோம். எங்களை போலீஸார் மிரட்டினர். மணிகண்டன்மரத்தில்இறங்கி வந்த போது அவரை சார்பு ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டார். இதில் மணிகண்டனின் இரு கால்களிலும் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். உள்ளூர் போலீஸார்விசாரித்தால் எங்களுக்கு நியாயம் கிடைக்காது.எனவே என் மகன் போலீஸாரால் சுடப்பட்ட வழக்கு விசாரணையை சிபிஐ அல்லது வேறு விசாரணை அமைப்புக்கு மாற்றவும், அதுவரை விசாரணைக்கு தடை விதித்தும் உத்தரவிட வேண்டும்." இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி புகழேந்தி முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரரின் கோரிக்கை ஏற்றுக்கொண்ட நீதிபதி, விவசாயி மீது துப்பாக்கியால் சுட்ட வழக்கை சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டார்.

## "ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏவை கைது செய்ய திராணி இருக்கிறதா?" முதலமைச்சர் விஜய்க்கு எடப்பாடி பழனிசாமி சவால்



சென்னை: "ஸ்ரீவைகுண்டம் பெண்ணுக்கு நடந்த பாலியல் வன்கொடுமைக்கு வக்காலத்து வாங்கி சமரசம் பேசி மறைக்க முயன்ற தவெக எம்எல்ஏ சரவணனை ராஜினாமா செய்ய வைத்து, கைது செய்ய இன்றைய முதல்வருக்கு தெம்பு, திராணி இருக்கிறதா?" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வினவியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் இன்றைய முதல்வரின் ரசிகையான பெண் ஒருவர் ஆளுங்கட்சி தவெக நிர்வாகிகளால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக வரும் செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

ஸ்ரீவைகுண்டம்தவெக எம்எல்ஏ சரவணன் ஆதரவில், இந்த கொடூரத்தை ஆளுங்கட்சியைச் சேர்ந்த இருவர் அரங்கேற்றியுள்ளதாக தெரிகிறது. மேலும், இதனை மறைக்க, தவெக எம்எல்ஏ சரவணனே அந்த பெண்ணிடம் "அமைச்சரிடம் பேசி வேலை வாங்கித் தருவதாக" சமரசம் பேசியதாக செய்திகள் வருகிறது.

'சிங்கப்பெண்' அதிரடிப் படைக்கான முதல் வழக்கே ஆளுங்கட்சி வழக்கா?. அதுவும், ஒரு ஆளுங்கட்சி எம்எல்ஏ இப்படி கேடுகெட்டத்தனமான செயலுக்கு சமரசம் பேசுவதை இன்றைய முதல்வர் ஏற்றுக்கொள்கிறாரா?. உங்களை திரையில் ரசித்து வளர்ந்த பெண்ணுக்கு, உங்கள் ஆட்சியில், உங்கள் கட்சியினரால் நடைபெற்றுள்ள இந்த கொடுமைக்கு பதில் சொல்ல வேண்டிய கடமை உங்களுக்கு உள்ளதை உணர்கிறீர்களா?.

"அமைச்சருக்கு தெரியும்; மேலிடத்திற்கு தெரியும்" என்றெல்லாம் தெனாவட்டு பேச்சுகள் வருகிறது என்றால், அப்படி என்ன மேலிடம்? யார் அது? முதல்வரா? அல்லது, முதல்வரைத் தாண்டிய ஏதேனும்பவர் சென்டரா?. 'சிங்கப்பெண்' அதிரடிப் படை துவக்க விழாவில் ஒரே டேக்கில் பேசிய வசனங்களை எல்லாம் உங்கள் கட்சியினரைப்பார்த்துபேசுங்கள் முதல்வர் விஜய். பாலியல் வன்கொடுமைக்கு வக்காலத்து வாங்கி சமரசம் பேசி மறைக்க முயன்ற உங்கள் கட்சி எம்எல்ஏ-வை பதவி ராஜினாமா செய்ய வைத்து கைது செய்ய இன்றைய முதல்வருக்கு தெம்பு, திராணி இருக்கிறதா?. வேறொரு பெண்ணுக்கும் இக்கொடுமை நடந்துள்ளதாக பாதிக்கப்பட்ட பெண் கூறியுள்ளதாக செய்திகள் வருகின்றன. அதனால், இந்த வழக்கை எந்த அரசியல் இடையூருக்கும் இடமின்றி விசாரித்து, குற்றம் இழைத்தவர்கள் மீதும், குற்றத்திற்கு துணை போனோர் அனைவர் மீதும், அது யாராக இருந்தாலும் சரி, எந்த எம்எல்ஏ-வாக,அமைச்சராக இருந்தாலும் சரி, கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசை வலியுறுத்துகிறேன்," எனத் தெரிவித்துள்ளார்.

## 'Arrogance', 'nepotism': Why is Abhishek Banerjee, not Mamata, the main problem of TMC rebels

Abhishek Banerjee, nephew of former West Bengal chief minister Mamata Banerjee and Diamond Harbour MP, has emerged to be one of the main problem of rebel Trinamool Congress (TMC) leaders who are distancing themselves from the party one after another in the biggest identity crisis for the outfit that was in power in the state for three straight terms.

Mamata Banerjee, TMC founder, has been abandoned by almost the entire elected section of her own party, with corruption and Abhishek Banerjee being cited as the reason for rebellion by most of the rebel MLAs as well as MPs. Track TMC crisis June 11 news here

Adding to back-to-back setbacks, Mamata Banerjee lost a third Rajya Sabha MP – Prakash Chik Baraik – this week with him resigning on Thursday. On Wednesday, Sushmita Dev announced her resignation as Rajya Sabha MP and exit from the TMC. Dev's exit came two days after TMC leader Sukhendu Sekhar Ray resigned from the Rajya Sabha, alleging "unbridled corruption" and "anarchical rule" of the party. Follow TMC crisis



June 11 updates here

The resignations of Dev and Ray come as the latest blow after an unsteady week for Mamata Banerjee, with TMC suffering a split in Bengal assembly – with 58 lawmakers backing rebel leader Ritabrata Banerjee, who staked claim to the Leader of the Opposition position – and also showing signs of cracks in Parliament with MP Kakoli Ghosh this Monday offering support to the National Democratic Alliance (NDA), claiming she has backing of 19 other MPs – the number require to evade anti-defection law.

Amid the turmoil, Mamata Banerjee met senior Congress leader Sonia Gandhi on Tuesday, a meeting after which speculation of TMC's "merger" with the Grand Old Party floated.

Why is Abhishek Banerjee rebels' main problem?

Amid the exodus of key leaders, a major blow, possibly the biggest, brewed for Mamata Banerjee on Thursday as one of her closest aide – Kalyan Banerjee – asked her to choose between him and her nephew, Abhishek.

Not just Kalyan Banerjee, Ritabrata Banerjee also led the rebellion of MLAs last week urging Mamata Banerjee to be the their chief advisor, saying that Abhishek Banerjee has no connection with state assembly.

Abhishek's pre-eminence in the party, and his alleged preference for strategy firm I-PAC over party cadres, has been cited by the rebels among their reasons for breaking ranks to claim "the real TMC".

Rebels within the TMC oppose Abhishek Banerjee accusing him of having a centralised, "arrogant" leadership style, causing systemic alienation of the party's old guard, and the excessive reliance on political consultants like I-PAC for candidate selection and internal decisions. Kalyan Banerjee, a lawyer by profession, said he will not appear for Abhishek Banerjee in any case because he does not like his "arrogant attitude".

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.